4. அரசினர் தீர்மானங்கள்.

(அ) விதி 41(3)ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"சட்டப் பேரவையின் 244-வது விதியின்கீழ், 41-வது விதி மூன்றாவது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட் காரியங்களைக் கொண்டுவரக்கூடாது என்பதைத் தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

5. கவன ஈர்ப்பு.

(அ) கோவை மாவட்டத்தில் சில கிராமங்களில் குழாய் கிணறுகளிலிருந்து பம்பு செட்மூலம் தண்ணீர் எடுப்பதால் தண்ணீர்ப்பஞ்சம்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : பேரவைத் தலைவர் அவர்களே சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான காரியத்தை, மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன் :

"கோவை மாவட்டத்தில் பூளுவபட்டி கிராமத்திலும், மத்வராயபுரம் மாதம் பட்டி இன்ன பிற கிராமத்திலும் நொய்யலாற்றின் கரைகளில் குழாய்க் கிணறுகள் தோண்டி மிகச் சக்தி வாய்ந்த பம்பு செட்டுகள் வைத்துத் தண்ணீர் உறிஞ்சுவதால் அப்பகுதியிலுள்ள ஜனங்களுக்கும் கால் நடைகளுக்கும் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாமல் இருப்பதால் அந்நிலையைப் போக்க வேண்டிய அவசரப் பொது முக்கியமான காரியம்."

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் ஐந்தாண்டுக் கால அளவில் படிப்படியாக நில நீர் வாய்ப்புக்களை விரிவாக ஆராயவும், புலனாய்வு நடத்தவும் 1967 ஜூலையில் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. மாடம்பட்டி, மாதவ புரம், இருட்டுப்பள்ளம், கிராமங்களில் ஆய்வுத் துளைகளை இட்டுப் பொதுப்பணித் துறை இப்பணியைத் தொடங்கியது. மேலே சொன்ன சோதனைத் துளைகள் அனைத்திலும் பணி நடந்து வருகிறது. இதுவரையில் இந்தத் துளைகள் எதிலும் நீர் ஊற்றுக்கள் வெளிவரவில்லை.

கோயம்புத்தூர் நகராட்சியின் நீர் வழங்குதலில் ஏற்படும் நெருக்கடியைச் சரிசெய்யும் அவசர நடவடிக்கையாக குமாரசாமி, செல்வ சிந்தாமணி ஏரிகளில் புதிய துளைக் கிணறுகள் தோண்டப்பட்டு வருகின்றன.

இந்தச் சோதனைத் துளைக் கிணறுகளிலிருந்து நில நீர் எத்தகைய சிறப்பான பயனுக்குப் பயன்படுத்தப்படுமென்பது இச் சோதனைத் துளைக் கிணறுகள் முடிவடைந்ததும் நடத்தப்படவிருக்கும் நீரின் அளவு, நீரின் இயல்பு குறித்த சோதனைகளைப் பொறுத்ததாகும். இந்தக் கிணறுகளிலிருந்து பெருமளவு நீரையோ அல்லது நல்ல தரமான நீரையோ எதிர்பார்ப்பது இப்போதைக்கு இயலாத ஒன்றாகும். இந் நீர் குடிப்பதற்கு ஏற்றதென்று கொண்டால் கோயம்புத்தூர் நகராட்சியில் இந்த ஆண்டு ஏப்ரல் மே மாதங்களில் வழங்கப்படக்கூடிய நீரின் அளவு சுமார் 10 முதல் 12 மில்லியன் கன அடியாகும். இந்த நீர் அளவு 50 முதல் 60 ஏக்கர் நிலத்திற்கு மட்டுமே பாசனம் அளிக்க முடியும். இந்த வடி நிலத்தில் 20,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் உள்ளன என்பதைக் கருதிப்பார்க்கும்போது இது மிகக் குறைந்த அளவேயாகும். கோயம்புத்தூருக்கு நீர் வழங்க நீர்த் தேக்கத்திலிருந்து நீரை விசையேற்றம் மூலம் இறைப்பதற்குச் செலவு குறையுமாதலால் நீண்டகாலப் பயனுக்குத் துளைக் கிணறுகளிலிருந்து நீரை இறைப்பது கைவிடப்படலாம். சோதனைக் கிணறு

களின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் சோதனைகள், உழவர்களுக்கும் அந்தப் பகுதிக்கும் பயனுள்ள தகவலை அளிக்கும் : பல ஐயங்களையும் அவசரமாகக்கொண்ட தவறான கருத்துக்களையும் தெளிவாக்கும்.

நொய்யல் வடி நிலப்பகுதியில் துளைக் கிணறுகள் இறக்கப்படுவதால் அருகிலுள்ள பகுதிகளிலுள்ள கிணறுகள் வறண்டுவிடுமென்ற அச்சம் அடிப்படையற்றதாகும்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : தலைவர் அவர்களே, அமைச்சர் பதிலில் கோவை நகரத்திற்குக் குடி தண்ணீர் கொடுப்பதற்காகக் கிணறுகள் போடப் பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அமைச்சரவர்களும், அதிகாரிகளும் மற்றுமுள்ள முனிசிபல் கவுன்சிலர்களும் கூடிய குழுவில் ஆராயப்பட்டு, அந்தப் பகுதியில் குழாய்க் கிணறுகள் போடுவதால், அந்தப் பகுதி பாதிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, இதைக் கைவிடலாம் என்ற அபிப்பிராயம் கோவை நகரில்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கந்தான் பெறலாம். இரண்டொரு கேள்விகள்தான் போடலாம். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : மன்னிக்கவேண்டும். இந்த அரசாங்கத்தின் ஆணைப்படி விவசாயிகள் பாதிக்கப்படும் நிலை இருக்கிறது என்பதை ஆராய்ந்துபார்க்க கலெக்டர் அவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதற்குப் பதில் இல்லை. அதற்கான காரணம் என்ன ? அமைச்சரவை ஒரு திட்டத்தை போட்டபிறகு, அதற்கு மாறாக அமல் செய்திருப்பின் அதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அமைச்சரவையில் முடிவு குமாரசாமி, செல்வசிந்தாமணி ஏரிகளில் துளைக்கிணறு போடவேண்டும் என்பது. அதோடு மாடம்பட்டி, மாதவபுரம், இருட்டுப்பள்ளம் இங்கெல்லாம் போடப்படும் கிணறுகள் சோதனைக்கிணறுகள்தான். இதில் நீர் கிடைக்கும்போது, அது விவசாயிகளுக்குப் பெருந்துணையாகத்தான் இருக்குமேயல்லாது, அது பாதகமாக இருக்காது. அப்படிப்பட்ட அச்சம் ஆதாரமற்றது. விவசாயிகளுக்கும். சாகுபடிக்கும் குந்தகம் ஏற்படாது.

(ஆ) தென்னார்க்காடு மாவட்டம், குறிஞ்சிப்பாடி நகரப் பஞ்சாயத்தில் குடி தண்ணீர் வழங்கல்.

திரு. என். ராஜாங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

"தென்னார்க்காடு மாவட்டம், கடலூர் வட்டம், குறிஞ்சிப்பாடி நகரப் பஞ்சாயத்து எல்லையில் சுமார் 12 ஆயிரம் மக்கள் வசிப்பதால் அந்நகரப் பஞ்சாயத்துக்குட்பட்ட இரண்டு "போர்" கிணறுகளும், மற்றுமுள்ள நீர்த் தேக்கங்களும், தண்ணீர் இல்லாமல் வறண்ட காரணத்தால், குடிதண்ணீருக்கு பஞ்சம் ஏற்பட்டதை நீக்கி, மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி செய்துதர வேண்டும்."

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, குறிஞ்சிப்பாடி ஊராட்சிக்காக நீர் வழங்குத் திட்டம் எதற்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கவில்லை. இந்த ஊராட்சிக்காக நீர் வழங்குத்திட்டம் எதையும் மேற்கொள்ளும் செயற்குறிப்புத் தற்போதைக்கு இல்லை. நகர நீர் வழங்கு, கழிவு நீர் அகற்றுத் திட்டங்களுக்காக நான் காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 12·50 லட்சம் நிதி ஒதுக்கம் செய்யக்கருதப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கத்தில் பெரும் பகுதி மூன்றாவது திட்டத்தில் முழுவதும்